1968 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் நாளை தீர்ப்பைச் சொல்கிறேன். அடுத்தபடியாக மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

6. அமைச்சர் அறிக்கை

வினாவிற்கு அளித்த விடையை திருத்தல்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Deputy Speaker, Sir, I wish to make the following correction to the answer given by me to the supplementary question by Thiru V. K. Kothandaraman, M.L.A. to question No. 164 (starred) answered on 7th March 1968 regarding the penalty leviable under the Madras Entertainments Tax Act, 1939 for being found without a counterfoil of a ticket or pass in a cinema house.

To a supplementary question by Thiru V. K. Kothandaraman, M.L.A., I replied from memory that the Madras Entertainments Tax Act, 1939 provides for prosecution and for levy of a penalty up to Rs. 500 on the persons, who are found without a ticket or a pass in any place of entertainment. The provision for levy of penalty upto Rs. 500 as in Section 14 (1) of the Madras Entertainments Tax Act, 1939, relates to offences by the proprietor of the entertainment or any person employed by him for the offences specified in that sub-section. I have now verified that the maximum amount of penalty leviable for being found without a ticket or pass in any place of entertainment as provided under Section 14-A of the Madras Entertainments Tax Act, 1939, is only Rs. 100.

7. அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்கு முன்னால் பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். வள்ளுவருடைய படத்தை நாம் இந்த அவையிலே வைத்திருக்கிறோம். வள்ளுவருடைய வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிறோம். வள்ளுவர் குறளில் 'இல்லாத பொருளே இல்லை, என்று சொல்லும் அளவுக்கு எல்லாவற்றைப் பற்றியும் கூறியிருக்கிறார் என்று சொல்லுகிறோம். எல்லாவற்றையும் சொல்லிய வள்ளுவர் 1,330 குறள்களைப் பாடியிருக்கிறார். அந்த 1,330 குறள்களிலே உலகத்தில் இருக்கும் அவ்வளவு காரியங்களைப் பற்றியும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறையிலே கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட வள்ளுவர், ஒன்றே முக்கால் அடியிலே பல கருத்துக்களைக் கூறிய வள்ளுவர், சொல்லிலே சிக்கனம் காட்டிய அந்த வள்ளுவர், இந்தப் பேச்சுக் கலைக்கு மட்டும் எத்தனை அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார் என்று பார்த்தால்—அவையறிதல், அவையஞ்சாமை, இனியவை கூறல், சொல் வன்மை, பயனில சொல்லாமை, புறங்கூறாமை, வாய்மை என்ற ஏழு அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார். அது மட்டுமல்லாமல், 'அடக்கமுடைமை' என்ற அதிகாரத்திலே—

“ யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.”